**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

**நாள்** 03.12.2024

**அசல் வழக்கு எண் 140/2016**

**வா.சா.1. - ஜீவா, க /பெ. தில்லை நாயகம், த/பெ. சுவாமிநாதன்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**1 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

அபிராமி மற்றும் அன்னபூரணி உங்கள் அக்கா என்றால் சரிதான். உங்களுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உங்களுக்கு என்ன வயதாகிறது என்றால் 60 வயதாகிறது. எத்தனை பிள்ளைகள் என்றால் எனக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். உங்கள் பெரிய பையன் பெயர் என்ன சக்தி விநாயகம் அவருக்கு என்ன வயது என்றால் 40 வயதாகிறது. உங்கள் கணவர் பெயர் தில்லைநாயகம் என்றால் சரிதான் அவர் ஐயங்கார் குளம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். உங்களுக்கு திருமணம் நடைபெற்றதிலிருந்து நீங்கள் அவருடன் அங்கே தான் இருக்கிறீர்கள் என்றால் சரிதான். 45 ஆண்டுகளாக அவருடன் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். அபிராமி என்பவர் நடுத்தெருவில் உள்ள ஓட்டு வீட்டில் வழக்கு சொத்தில் 1 வது அயிட்ட சொத்தில் வசிக்கிறார் என்றால் சரிதான். உங்கள் அப்பா எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது தேதி ஞாபகம் இல்லை. அவருடைய இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அம்மா எப்போது இறந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தற்போது அம்மா இறந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டது. உங்கள் அம்மா இறப்புக்கு இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. உங்கள் அப்பா அம்மாவிற்கு வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்கள் அப்பா இறக்கும்போது இரண்டாவது அயிட்டம் சொத்து செங்குந்தர் தெருவில் உள்ள சொத்து உங்களுக்கு சொந்தமாக இல்லை என்றால் சரிதான். உங்கள் குடும்பத்தினரிடம் அந்த சொத்து இல்லை என்றால் சரிதான். உங்கள் அப்பா இறந்து பிறகு 2015 ல் தான் இரண்டாவது அயிட்ட சொத்து 1 வது பிரதிவாதியின் பெயரில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அண்ணபூரணி அம்மாளுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு திருமணம் நடைபெறுவதற்கு முன்பே திருமணம் நடைபெற்றது. அவர் திருமணத்திற்கு பிறகு அவருடைய கணவருடன் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிகளும் நீங்களும்

திருமணத்திற்கு பிறகு கணவருடன் தனித்தனியாக வசித்து வருகிறீர்கள் யாரும் கூட்டாக வசிக்கவில்லை என்றால் சரிதான். இரண்டாவது அயிட்டம் சொத்து பூர்வீக சொத்து என்று காட்டுவதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அபிராமி அம்மாள் ஒரு செங்குந்த சமுதாயத்தை சார்ந்தவர் என்பதற்காக எழுதிக் கொடுக்கப்பட்டதாக ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் கூறியுள்ளவாறு நீங்கள் அனைவரும் கூட்டுக் குடும்பமாக இருந்தீர்கள் அதற்காக தாவாசொத்தில் பங்கு வேண்டும் என்று கூறுவது போல் வாசகம் எதுவும் வா.சா.ஆ 1ல் இல்லை என்றால் சரிதான். அபிராமி பெயரில் செங்குந்தர் சமுதாயம் எழுதிக் கொடுத்தது சரியில்லை என்று ஆட்சேபம் தெரிவித்து ஏதேனும் கடிதம் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். யாரிடம் கொடுத்தீர்கள் என்றால் யாரிடமும் கொடுக்கவில்லை. தாவா முதல் அயிட்டம் சொத்தில் கூட்டு சுவாதி இனத்தில் இருப்பதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது என்னுடைய அப்பா பெயரில் உள்ளது. வா.சா.ஆ 1ல் முதல் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் செல்ல தக்கது அல்ல என்று பரிகாரம் கோரி உள்ளீர்களா என்றால் கோரவில்லை. செங்குந்தர் சமுதாயத்தைச் சேர்ந்த பத்திரம் எழுதிக் கொடுத்தவர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக நீங்கள் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பணம் பொருள் உள்ளதாக கூறுகிறீர்கள் அதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அபிராமி அம்மாளுக்கு இரண்டாவது அயிட்ட சொத்து செங்குந்தர் சமுதாயம் சார்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட சொத்தாகும். ஆகவே உங்களுக்கு அந்த சொத்தில் எந்த ஒரு பாத்தியத்தையும் இல்லை என்றால் சரி இல்லை. அது அது மூன்று பேருக்கும் சொந்தமான சொத்தாகும். நீங்கள் கூறுவது போல் மூன்று பேருக்கும் சொந்தமானது இல்லை அபிராமிக்கு மட்டும் சொந்தமானது என்றால் சரியில்லை. இந்த வழக்கினை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வழக்கு மூலம் எதுவும் இல்லை என்றால் சரி இல்லை. வழக்கிற்கான உரிய நீதிமன்ற கட்டணத்தை நீங்கள் செலுத்தவில்லை என்றால் சரியில்லை. வழக்கு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டதால் கால வரையறை சட்டத்தினால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியில்லை. உங்கள் தந்தைக்கு சொந்தமான நடுத்தெருவில் உள்ள வீட்டை மூன்று பாகமாக பிரித்து ஒரு பாகம் உங்களுக்கு வழங்க எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். இரண்டாவது அயிட்டம் சொத்தை பொறுத்த அளவில் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை. இரண்டாவது அயிட்ட சொத்து தாத்தாவின் சொத்து ஆகவே அதில் பாகம் எங்களுக்கு உள்ளது. இரண்டாவது அயிட்ட சொத்து தாத்தாவின் சொத்து

என்று கூறும் நீங்கள் அதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2ம் பிரதிவாதிக்காக குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd-/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.